// பாதுகாப்பான முறையில் //

இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் 623 503
ப.மு.எண். 8468 /அ1/2021 நாள்– 03 .12.2021

---------

பொருள் – பள்ளிக் கல்வி– அமைச்சுப் பணி – இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி – இளநிலை உதவியாளர் ந.முருகேசன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 22.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை – .
1) அரசாணை (நிலை) எண்.101 பள்ளிக் கல்வி (வரவு–செலவு–1) துறை நாள்–18.05.2018.
2) இராமநாதபுரம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.4536/அ1/2020 நாள்–17.09.2020 (பணிநியமனம்)
3) சாயல்குடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியரின் கடித ந.க.எண். 192 / அ1 / 2021 நாள்– 19 .11.2021

+++++++

இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 22.09.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்துவரும் ந.முருகேசன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரும் கருத்துருவினை பார்வை–3ல் காணும் கடிதம் வாயிலாக சம்பந்தப்பட்ட தலைமையாசிரியரால் பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் (Group-IV) 2018-2019 & 2019-20 இல் தேர்வு செய்யப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். அன்னாரின் கல்விச் சான்றுகள் உண்மைத்தன்மை சான்று பெறப்பட்டுள்ளது. எனவே இப்பணியாளரின் விண்ணப்பம் மற்றும் பார்வை–3ல் கண்ட பரிந்துரையின் அடிப்படையில் அன்னார் இளநிலை உதவியாளர் பதவியில் முதன்முதலில் பணியேற்ற நாளான 22.09.2020 முற்பகல் முதல் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

இப்பணியாளர் பணியேற்ற நாள்முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சினையும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற வேண்டும்.

மேலும், தனியரின் பணிப்பதிவேடு 1–திரள் இதனுடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் அளிக்குமாறும் மேலும் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சார்ந்த தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3/12/21

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு –1 திரள்

முதன்மைக் கல்வி அலுவலர்
இராமநாதபுரம் 623 503

07.12.2021

பெறுநர் – தொடர்புடையவர் (தலைமையாசிரியர் வழியாக)

நகல் – தலைமையாசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, சாயல்குடி